**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**O.S.No. 14/2023**

2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05 நாள் வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.பிரபாகரன் | தாலுகா | : |
| த/ பெயர்<br>க/ பெயர் | :<br>: | கிராமம் | : |
| வயது | : | மதம் | : |
| தொழில் | : | ஜாதி | : |

**<u>வா.சா.1</u>**
நாள் : 05.12.2024
நேரம் : 11.31 AM

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பு சாட்சி 1ஆக எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

1)தாவா சொத்திற்கு வாதிகள் வகையறாக்கள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட SLR சான்றிட்ட நகல் **வா.சா.ஆ1**

2)தாவா சொத்திற்கு வாதிகளால் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட FMB உண்மை நகல் **வா.சா.ஆ.2**

3)தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் சார்பதிவகத்தில் பெறப்பட்ட நகல் அசல் **வா.சா.ஆ.3**

4)வாதிகள் அவர் பவர்தாரருக்கு நோட்டரி வழக்கறிஞர் மூலம் வழங்கிய பொது அதிகார ஆவணம் அசல் **வா.சா.ஆ.4**

5)பிரதிவாதிகளின் தகப்பனாரின் ஆன ஆறுமுக கோனார் கடந்த 03.05.1969 ம் தேதி தாவா சொத்தினை முதுகுளத்தூர் சார்பதிவக பதிவு எண்.635/1969 ன் படி பெற்ற கிரைய ஆவணம் SRO நகல் **வா.சா.ஆ.5**

6)வாதிகளின் தகப்பனாரின் தாத்தா 04.12.1939 ம் தேதி முதுகுளத்தூர் சார்பதிவக பதிவு எண்.3571/1939 கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.6**

7)தாவா சொத்திற்கான கணினி 10(1)பட்டா இணைய நகல் **வா.சா.ஆ.7**

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.39. AM

சாட்சியின் கையொப்பம்